www.padippakam.com

# தாயகம்

மலர்:- 1

(மாதமொருமுறை) - ஜூலை (ஆடி)




இருள் படிந்த
எங்கள் தாயகத்தின்
விடுதலைக்காக
தங்கள் இறுதி
மூச்சுள்ளவரை
போராடி வீரமரணமடைந்த
விடுதலைப் புலித்
தோழர்களுக்கு இவை
சமர்ப்பணம் ...



டென்மார்க், தமிழர் நலன் புரிமன்ற வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com



# உருகும் மெழுகுவர்த்திகளே....

இருள் படிந்த இந்த தேசத்துக்கு
விடியலைக் கொண்டு வர வீரமுடன் போராடிய
வீரவேங்கைகளே,

நாளைய சந்ததி காடுகளிலும், பதுங்குகுழிகளிலும்
வாழக்கூடாதென்பதற்காக
இன்று உங்கள் வசிப்பிடங்களை
காடுகளும், பதுங்குகுழிகளுமாக
மாற்றி விட்டீர்களா?

எங்கள் இனத்தின் வாழ்க்கையில்
இருளை விரட்டியடிக்க ~~[illegible]~~
நீங்கள் தினம் தினம் இருளிலும்
விழித்தபடி காவல் காக்கின்றீர்கள்.
நீங்கள் மரணத்தை கண்டு அஞ்சும்
பேடிகளல்ல-
மரணத்துடன் தினம் தினம் கைகோர்த்து
சிரித்தபடி போராடும் வேங்கைகள்.

நீங்கள் மக்களுக்குப் புரியாத
சிவப்பு சொற்களின் தோழர்களல்ல,
மக்களுக்குத் தெரிந்த "பொடியன்" நீங்கள்-
அதனால்தான்,
உங்கள் காலடிச் சுவடுகளே
தாயகத்து மண்ணை பாதுகாக்கின்றது.
நீங்கள் கடந்த பாதையில்
இன்று ஆயிரம், லட்சம் கால்கள்
நடை போடுகின்றன-
உங்கள் தியாகம் தான்
நாளைய தமிழீழம்!

- [illegible] -

படிப்பகம்

www.padippakam.com



# மக்களின் காவலர்கள்

இன்று யாழ் குடாநாட்டிலும், வட பகுதியின் பெரும்
பாலான இராணுவ முகாம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால்
சுற்றி வளைக்கப்பட்டுள்ளன. இவ்வளவு காலமும்
நினைத்த போதெல்லாம் ட்றக்குகளில் வந்து எங்கள்
மக்களை கொன்று, எங்கள் சகோதரிகளை கற்பழித்து
சிதைத்த ஸ்ரீலங்கா காவல்பட்டாளம் இன்று
தங்கள் தங்கள் முகாம்களை விட்டு வெளியேற
முடியாத நிலைமையிலேயே உள்ளது.

இராணுவம் தங்கள் முகாம்களை விட்டு வெளியேற
முயலும் போதெல்லாம் விடுதலைப்புலிகள் தங்கள்
உயிரைப் பணயம் வைத்து வீரப்போர் நடாத்தி
காவல்படைகளை மீண்டும் முகாமுக்குள் துரத்துகிறார்கள்

கிழக்கு மாகாணத்திலும் மக்களை வேட்டையாட
வந்த சிங்கள ஊர்காவல் படைகளை இன்று
விடுதலைப்புலிகள் துரத்தியடித்துக் கொண்டிருக்கின்றனர்
கிழக்கு மாகாணத்திலும், இப்போது வட பகுதியில்
உள்ளது போல் சிங்கள இராணுவத்தை முகாம்களுக்குள்
முடக்கி வைக்கும் நடவடிக்கை இன்று வெற்றியை
நோக்கி நகர்கின்றது.

இன்று தமிழீழத்திலுள்ள உங்கள் தாய், தந்தை,
சகோதர, சகோதரி, உற்றார், உறவினர் தங்கள்
வீடுகளில் நிம்மதியாகவும், வீதிகளில் தலைநிமிர்ந்து
செல்லவும் முடிகின்றது.
இப்போது அவர்கள் தங்கள் கைகளைப்பிடித்து
இருத்து கேவலம் செய்யும் இராணுவத்தை
வீதிகளில் காண முடியாது

படிப்பகம்

www.padippakam.com

இப்போது உயரத்திலிருந்து குண்டுகளைப் பொழியும் விமானங்களைத்தான் காண்கிறார்கள்.
மக்கள் மத்தியில் நுழைந்து மனிதவேட்டையாடும் நாய்களை காணமுடியாது. அந்த காக்கிநாய் இப்போது முகாம்களை விட்டு வெளியேறமுடியாது.

இப்படி அவர்களை ராணுவமுகாம்களுள் சிறை வைத்தவர்கள் யார்? சிறீலங்கா இராணுவ நாய்கள் மக்கள் மத்தியில் நுழையாமல் ராணுவ முகாம்களைச் சுற்றி இரவு, பகல், வெயில், மழை, பனி எல்லாம் காவல் காப்பவர்கள் யார்?
தமிழீழ விடுதலைப்புலிகள்தான்.

இன்றுவரை 262 விடுதலைப்புலிகள் தங்கள் உயிரை தியாகம் செய்துதான் இன்றுள்ள மக்களின் இந்த பாதுகாப்பு நடவடிக்கையை ஏற்படுத்தினார்கள்

இன்று இராணுவமுகாம்களை சுற்றிப் புலிகள் ஏற்படுத்தியுள்ள இந்த நிற்றுகையை ஒரு கணம் புலிகள் தளர்த்தினால் அங்குள்ள மக்களின் கதி என்ன? ஒரு கணம் சிந்தியுங்கள்.

தமிழீழத்தில் உங்கள் பெற்றோர், சகோதரங்களைத் தாக்கி வெறியப்பட்ட சந்தர்ப்பவாதக்கும்பல்களின் பின்னால் நீங்கள் இங்கு செல்வது உங்கள் பெற்றோருக்கும், சகோதரங்களுக்கும் இழைக்கும் மாபெரும் துரோகமாகும்.

தயவு செய்து இன்று நாட்டில் மக்களின் பாதுகாவலர்கள் யார்? சமூகவிரோதிகளிடமிருந்து மக்களை பாதுகாப்பது யார்? என்பதை நன்கு சிந்தித்து அவர்களின் கரங்களை பலப்படுத்த உங்களாலான உதவிகளை செய்யுங்கள்.

* * * * * * *

எழுதியவர்:- ராஜ்குமார்
கோநதும்.


படிப்பகம்

www.padippakam.com






தூர்ந்துபோன குளங்களை திருத்தும் பணியில் இளம் விடுதலைப் புலிகள்.



விடுதலைப் புலிகளாக இளைஞர்கள் மட்டுமன்றி சிறுவர்களும்...



பொதுமக்களுக்கு தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி புலிகளால் நடத்தப்பெற்ற வகுப்புக்கள்.

மக்களோடு,
மக்களாக
மக்களுக்காக
மக்களின்
விடுதலைப்
புலிகள் -
தடித்த சிவப்புப்
புத்தகங்களின்
வார்த்தை
ஜாலவித்தை
காட்டாமல்,
நடைமுறையில்
ரத்தத்தையும்,
வியர்வையையும்
சிந்தும் உண்மையான
போராளிகள்!




படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திரம்

சுதந்திரத்தின் சுடரை ஏற்றி
வருவதற்காக கனத்த
இருளில் அவன் சென்றான்
திரும்பி வருவேன்
எனக்காகக் காத்திருங்கள் என்றான்

எங்கே சென்றான்?
சோகத்தில் கறுத்த
பனைக் கோடுகளுக்குள்—
தத்தளிக்கும் கருநீலக்
கடல் வெளியினூடே—
எத்தனை தடைகளை
அவன் தகர்த்திருப்பான்?
கடுமையான முனைகளில்
எப்படிப் போரிட்டான்?

தெரியவில்லை.

தெரிவதெல்லாம்
சுதந்திரத்தை மீட்டு வருவதாகத்
தந்த உறுதிமொழிகள்...
காத்திருக்கச் சொன்ன நம்பிக்கைகள்...

அவனுக்காகச் சில காலம்
காத்திருப்பேன்.
பிறகு, அவனும் வரவில்லையெனில்
நானே போவேன்.
நானும் திரும்பாவிட்டால்
எனது பையன்களும் போவார்கள்.

—சுனில் கங்கோபாத்யாய
எழுதிய வங்காளக் கவிதையைத் தழுவியது.



படிப்பகம்


www.padippakam.com

# பிறந்த மண்ணிலிருந்து




















# விரட்டப்பட்ட எம் மக்கள்

படிப்பகம்

www.padippakam.com

இன்று வரை 262 விடுதலைப்
புலிகள் தங்கள் தாயகத்திற்காக
தங்கள் இன்னுயிரை தியாகம்
செய்துள்ளார்கள்.
முதன் முதலாக தன்னுயிரைத்
தியாகம் செய்த தியாகமறவன்
சங்கர் (சத்தியநாதன்)





சங்கர்

தோற்றம் 19.6.61
மறைவு 27.11.82

நீ செய்த தியாகம் இன்று தொடர்கதையாக
தொடர்கின்றது - நீ உன் இரத்தத்தால்
தமிழீழ மண்ணினை சிவப்பாக்கினாய் - இன்று
உன் அருமைத் தோழர்கள் அதனை
தினம் தினம் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள்

படிப்பகம்

www.padippakam.com

தமிழீழ விடுதலைப் புலிகளில் முதல் முதலாக
தன் உயிரை தியாகம் செய்த

# சங்கர் (சத்தியநாதன்)

அடிமை விலங்கு பூட்டிய
கைகளைக் கொண்டே
அடிமை விலங்கை உடைக்கப்
புறப்பட்ட நண்பனே,

நீ துள்ளித் திரியும்
பள்ளிப் பருவத்திலேயே
எங்கள் தலைவனின்
அணியில் இணைந்தாய்.
மேடைப் பேச்சுகளும்,
தேர்தல் கோஷங்களும்,
கோயில் திருவிழாக்களும் நிறைந்த
ஒரு சோம்பல் - (உணர்வற்ற) காலத்தில்
உனக்கு மட்டும் எப்படி
ஒரு புதிய வழியில் செல்ல
ஒரு புரட்சி அணியில் இணைய
ஞானோதயம் கிடைத்தது.



ஏனென்றால்,
நீ மேடைத்தலைவர்களை விட
தியாகத்தலைவனை யாரென்று கண்டாய்.
தேர்தல் கோஷங்களை விட
துப்பாக்கி நாதம்தான் எமது விடுதலைக்கு வழி
என்று விழித்துக் கொண்டாய்.

(ம. பா. பா)

படிப்பகம்

www.padippakam.com

நண்பனே, பட்டினிகளையும்,
பசிமயக்கத்தையும்,
காட்டிக் கொடுப்புகளையும்,
இராணுவ சுற்றிவளைப்புகளையும்
நீ அஞ்சாமல் அலைந்து திரிந்து
இந்தப் புலி அமைப்பைப்
பலப்படுத்தினாய்.
அன்று நீ ஒரு பெட்டைச்சைக்கிளில்
ஒன்றில் தமிழீழத்தின் மூலைமுடுக்கெல்லாம்
ஓடித்திரிந்து வேலை செய்ததால்தான்
இன்று எங்கள் போராட்ட வீரர்கள்
வானிலும், கடலிலும் திரிய முடிகின்றது.
நீ வாழ்ந்த வரை
இராணுவத்துக்கெதிரான
அனைத்து தாக்குதல்களையும்
உன்னை ஈடுபடுத்திக் கொண்டாய்.
அதிலும் நெல்லியடிச் சந்தியில்
சிறீலங்கா கூலிப்பட்டாளத்தின்
வழியை மறித்து நீ பொழிந்த
வீரவேட்டுகள் தமிழீழம் உள்ளவரை
ஒலித்துக் கொண்டேயிருக்கும்.
அப்போது அமைப்பில் இருந்த
சிறிய ஆயுதங்களைப் பாவித்து
நீ நடாத்திய இந்த வீரவிளையாட்டு
மறக்கக் கூடியதா? இல்லை
மறையத்தான் கூடியதா?

www.padippakam.com

தோழனே, உன் பொன்னுடலில்
சிங்கள சிறப்புப்படைகளின்
தோட்டாக்கள் பாய்ந்த போதிலும்,
உன் உடலில் இருந்து உதிரம்
ஊற்றாக கொட்டிய போதும்
நீ அமைப்பின் ஆயுதங்களைக்
காப்பாற்ற எடுத்த முயற்சி
ஒரு மனிதனின் இலட்சியப்பற்றுக்கு
ஒரு உதாரணமாகும்.
நீ கடைசி வரை அமைப்பின் ஆயுதத்தை
பாதுகாப்பதிலும், அமைப்பின் இரகசியத்தை
காப்பதிலும் இறுதி வரை உழைத்தாய்.
நீ உன் இறுதி மூச்சுள்ளவரை இயக்கத்தின்
ஆயுதத்தை பாதுகாத்தாய்-
ஆனால் விலைமதிக்க முடியாத உன்னை
அமைப்பு இழந்து விட்டது.
உன் இறுதி மூச்சைக் கூட
நீ நேசித்த அந்த தலைவனின் மடியிலேயே
விட்ட உன்னுடைய விசுவாசம் யாருக்கும்
வராது?

(மே. பா.பா)

படிப்பகம்

www.padippakam.com

சிங்கர்,

உன் உடல்தான் அன்று
இந்திய மண்ணில் சாம்பலானது.
உன் கொள்கைகள் சாம்பலாகவில்லை.
உன் நினைவுகள் இன்றும் இனியும்
எங்கள் தாயக மண்ணில்
வட்டமிட்டுக் கொண்டேயிருக்கும்.

இனிமேல், உன்னுடைய தோழர்கள்
இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.
அவர்கள் தங்கள் இறுதி மூச்சுள்ளவரை
இந்த தாயகத்துக்காக போராடுவார்கள்.
அவர்கள் விடும் ஒவ்வொரு மூச்சும்
உன் நினைவுகள்தான்.
அவர்களின் துப்பாக்கிகள் துப்பும் ஒவ்வொரு
தோட்டாவும் உன் பெயரையே உச்சரிக்கும்.
நாளை வானில் அசையும்
தமிழீழ வண்ணக் கொடி
உன் பெயரை என்றும் நினைவுபடுத்தும்.

முற்றுகையில் முன்னின்று
முதற்சாவு நீ கண்டாய் - ஆனால்
இன்று எங்கள் எதிரிகள்
உன் தோழர்களின் முற்றுகையில்
முடிவறியாது திகைக்கின்றனர்.!

- முத்து -
போரிஷங்

படிப்பகம்

www.padippakam.com


தினம் தினம் எமது மக்களை வேட்டையாடி வரும் ஸ்ரீலங்காவின் கூலிப் படைகளின் இதயத்தை (அது இருந்தால்) ஈரமாக்கும் ஒரு கடிதம் விடுதலைப் புலியிடமிருந்து......

---

ஸ்ரீலங்கா இராணுவ வீரனுக்கு,

ஒரு தமிழீழ விடுதலைப் புலியிடமிருந்து. . .

தமிழீழ மண்ணில் கனன்று கொழுந்துவிட்டெரியும் விடுதலை எழுச்சியை நீ அறிவாய். எமது மண்ணின் விடுதலையை நாம் வென்றெடுப்பது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நியதி. சிங்களப் பெருந்தேசியவாத அரச பயங்கரவாதத்தின் கருவியாக, தமிழீழ விடுதலைப் போராளிகளைத் தேடியலைகின்ற நரவேட்டையின் கருவியாக, நீ செயற்படுகின்றாய்.

தமிழீழத்தின் வீதிகளில் நீ காக்கியணிந்து, ஆயுதமேந்தி, வாகனங்களில் வலம் வருவதை நாம் பார்க்கிறோம். ஒரு வயதான தாயையோ, தந்தையையோ அல்லது சகோதரியையோ பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் பேரில், கூலிக்காக நீ ஆயுதமேந்துகின்றாய். சிறிலங்காவின் ஆட்சிப்பீடத்தின் சுயநலக் கும்பலின் வளர்ச்சிக்கு சேவை செய்ய நீ பலியாகின்றாய். நீயோ ஆளும் வர்க்கப் பொறியினில் சிக்கி, உனது சகோதரர்களுக்கும், வர்க்கத்தினருக்கும் எதிராகத் திரும்பும், அவர்களின் எழுச்சியை நசுக்கவும் நீ ஆட்சிப்பீடத்தின் கருவியாகப் பயன்படுவாய்.

தேச விடுதலைக்கான வேட்கையில் உயர்ந்து நாங்கள், ஆளும் வர்க்கத்தின் கைப்பாவையான உன்னை எதிர்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம். போர்முனைச் சந்திப்பில் நீ பலிக்கடாவாகின்றாய். விடுதலைப் போர்ப் பாதையில் எமது சாவு மகத்தானது, அர்த்தமுள்ளது, கூலிக்காக மாரடிக்கும் உனது சாவோ அற்பமானது.

அரச பயங்கரவாதத்தின் படைக்கலமான நீ, தமிழீழ மண்ணில் புரிந்த கொலைகளும் நாசவேலைகளும் தமிழ் மக்கள் மனதில், அழியாது உறைந்துபோய்க் கிடக்கின்றன. ஆளும் வர்க்கத்தின் கறை படிந்த கைங்கரியங்களை நீ செய்து மடியாதே. அவர்களின் சுபீட்சத்துக்காக உனது நம்பிக்கையையும், மனிதாபிமானத்தையும் இழக்காதே. ஒடுக்கப்பட்ட சிங்கள விவசாயத் தொழிலாளிகளின் பக்கத்தில் நீ சேர்ந்து, ஆளும் வர்க்கத்துக்கு எதிராகப் போராடும் வேளையில் தான் நீயும் நாமும் தோழமையின் பேரில் கொள்ள முடியும். அப்படி நீ போராடுவாயானால் அப்பொழுதுதான் எமது போராட்டத்தின் நியாயத் தன்மையை நீ புரிந்து கொள்வாய்.

---

வெளியீடு: பிரசுர வெளியீட்டு பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள்.

படிப்பகம்

www.padippakam.com

# வியப்பு வதைக் கூத்து!

இதோ, எங்கள் நியாயமான தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு உலகமகா அதிசயம் காத்திருக்கின்றது. ஆம், உலகில் எங்குமே கேள்விப்பட்டேயிராத, நடைபெறாத ஒரு அதிசயம் நடைபெறப்போகின்றது.

என்னவென்று அதிசயப்படுகிறீர்களா?

தமிழ் மக்களுக்கு எந்த வித அழிவுமின்றி,
தமிழீழ மக்களுக்கு எந்த வித பிரச்சினையுமின்றி,
ஒரு மக்கள் புரட்சியை ஏற்படுத்தித் தமிழீழத்தை
வென்றெடுக்கப் போகின்றதாம் ஒரு கூட்டம்.

இதைத்தான் மக்களுக்கென்று தாங்கள் தூக்கிய துப்பாக்கிகளைத் தாங்க வைத்துக் கொண்டு, தாங்களும் இரட்டை வேடத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வியட்நாமின் தந்தை → ஹோசி மின்,
கியூபாவின் புரட்சித் தலைவர்கள் → பிடல் காஸ்ட்ரோ, சே குவேரா
ரஷ்யாவின், உலகின் பாட்டாளிப் புரட்சியின் முன்னோடி → லெனின்

இன்னும் உலகின் புரட்சியின் வீரர்களே, நீங்களெல்லாம் வீணாக உங்கள் மக்களின் உயிர்களை பலியிட்டு உங்கள் நாடுகளை விடுதலை ஆக்கினீர்கள். ஆனால் தமிழீழத்தில் மட்டும் மக்களின் அழிவின்றி ஒரு விடுதலைப் போராட்டத்தை நடாத்தப் போகின்றதாம் ஒரு புரட்சிகர (?) கூட்டம்.

(மே. ம. மா)

படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பத்தில் இந்தக் கூட்டம் கொல்லாப் போர்முறை
முறையென்று இருந்தது- அதன்பின்னர் சிறிது
காலத்தில் "கொல்லாப் போர்முறை சரியானது,
புரட்சிகரமானது. ஆனால் புலிகளின் 'hit and run'
முறை மட்டும் பிழையானது" என்று சொல்லியது.
ஆனால் இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்ட
சர்வதேச வரவேற்பு நிலைமைக்கும்,
சிங்கள ராணுவ வீரர்கள் தங்கள் முகாம்களை வி
வெளியே வந்து மக்களை வேட்டையாடாமல்
தடுத்து வைத்திருக்கும் நிலைமைக்கும்,
இன்று தமிழீழ மக்களை அரசியல்மயமாக்கி
மக்கள் போராட்டமாக தமிழீழ விடுதலைப் போராட்டம்
நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கும்
யாருடைய கொல்லாப் போராட்டம் காரணமென்று
இவர்கள் அறியமாட்டார்களா?
ஆனால் இன்று மக்கள் அறிந்து கொண்டுவிட்டார்கள்.

இந்த நிலையிலும் இந்த மக்கள் விடுதலைக்கூட்ட
தங்கள் போராட்டத்தைப் பற்றி சிந்திக்காமல்,
மாநாடுகளை நடாத்தி 'வீரகேசரி'க்கு
அறிக்கைகளை அனுப்புவதிலும்,
வானொலியில் மும்மொழி ஒலிபரப்பை புரட்சி(?)
தரமாக ஒலிபரப்புவதிலும் மட்டுமே
சந்தோசமடைகிறார்கள்.

மே

www.padippakam.com

இந்த இவர்களின் தோற்றங்களை இடை
வெட்கப்பட வேண்டிய இன்றைய நிகழ்ச்சிகளோ
இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ் குடாநாட்டை
தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் இருந்து
ஸ்ரீலங்கா சிங்களப்படையின் வெறியாட்டத்துக்கு
மாற்றுவதற்காக சிங்கள தரை, கடல், ஆகாய
படைகள் நடாத்திய மாபெரும் முற்றுகைத்
தாக்குதலின் போது, வடபகுதியுள் நுழைந்து
எமது மக்களை நரவேட்டையாட துடித்த
சிங்களபடைகளை புலிகள் மட்டுமே எதிர்த்து
நின்று தியாகப் போர் நடாத்திய போது
எங்கே ஒளிந்தார்கள் இந்த புரட்சிக்காரர்கள்

அந்த ஒரு கிழமைப் போரில்
ஆனையிறவில் இருந்து வந்த,
அநுராதபுரத்தில் இருந்து வந்த,
பலாலியில் இருந்து வந்த,
யாழ் கோட்டையில் இருந்து வந்த,
வல்வெட்டித்துறையில் இருந்து வந்த,
பருத்துறையில் இருந்து வந்த,
சிங்கள ரத்தவெறிப்படையை எமது தாயகத்துள்
நுழைய விட்டிருந்தால் இன்று யாழ் குடா
நாட்டில் யாராவது மிஞ்சியிருப்பார்களா?
எமது நாட்டை சாம்பல் மேடாகவல்லவா மாற்றி
இருப்பார்கள். இதனை தடுத்தது யார்?
இதனைத் தடுப்பதற்காக தங்கள் உயிர்களை
தியாகம் செய்தவர்கள் யார்? இதனைத் தடுப்பதற்கா
தங்கள் உடம்பில் காயங்களை ஏற்ற ஊனமான
வர்கள் யார்?

தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டுமே.
அவர்கள் மட்டும்தான்.

(மே. பா)

படிப்பகம்

ஆனால் புலிகளின் இந்த தியாகப் போரைப்பற்றி
மக்கள் மனதில் எழுந்த புலிகளின் ஆதரவு
அலையை திசை திருப்புவதற்காக இந்த
மக்கள் விரோதிக் கூட்டத்தின் வெளிநாட்டு
ஏஜென்டுகளும், உள்நாட்டு ஏஜென்டுகளும்
ஒரு பொய்யை, பெரும் பொய்யை திரித்துவிட்டார்கள்.

'பருத்துறை முகாமை விட்டு வெளியே அந்த
கூலிப்படைகளை கடுமையான தாக்குதல்
மூலம் அழித்து பின்வாங்கச் செய்தோம்'
என்பதுதான் அது.

'முழுப் பூசணியை சோற்றில் மறைத்த இந்தப்
பொய்யை இவர்களின் பிரச்சார சாதனங்களான
வானொலி, தகவல் நிலையங்கள், தொலைக்காட்சிகள்
அனைத்தும் ஒலிபரப்பின.

வெளிநாடுகளில் இவர்களின் இந்த கற்பனைத்
தாக்குதல் மிகவும் மிகவும் மிகைப்படுத்தி
பிரச்சாரம் செய்யப்பட்டன.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் இந்தப்
பொய்யைக் கண்டுபிடிக்க நாட்கள் சில
சென்ற போதிலும், தாயகத்திலுள்ள மக்கள்,
தமிழீழத்திலுள்ள மக்கள் உடனே கண்டு
பிடித்துவிட்டார்கள் - தமிழீழத்திலுள்ள
மக்கள் இதைப் போன்ற எத்தனை
புரட்டுக் கும்பல்களை சந்தித்துவிட்டார்கள்.
இவர்களின் இந்தப் பொய்யைக் கேட்ட
தமிழீழத்திலுள்ள மக்கள் திகைத்தார்கள்.
அதிர்ச்சியுற்றார்கள்.

(மே. பா.பா)

www.padippakam.com

இந்தக் கற்பனைக் கூட்டம் தாங்கள் எங்கும் தாக்குதல் நடாத்தியதாக புளுகினார்களோ, அந்தப் பருத்துறை பிரஜைகள் குழுவினர் உடனே இவர்களின் முகமூடியை கிழித்து அறிக்கை விட்டார்கள். இதனைப் பொறுக்க முடியாத இக் கூட்டம் பிரஜைகள் குழுத் தலைவரை கடத்திச் சென்று மிரட்டி அடாவடித்தனம் செய்தார்கள் பருத்துறை இராணுவ முகாம் மீது தாங்கள் தாக்குதல் நடாத்தியதாக எழுதித் தரும்படி பிரஜைகள் குழுத் தலைவரை மிரட்டியது. பின்னர் புலிகள் சென்று பிரஜைகள் குழுத்தலைவ மீட்டு வந்து மக்களிடம் ஒப்படைத்தது. (மக்கள் வெளியிட்ட பிரசுரம் எம்மிடமுள்ளது)

மக்களே, பார்த்தீர்களா?
எங்களின் விடுதலைக்கென்று கூறிக் கொண் புறப்பட்டவர்கள், போராடப் புறப்பட்டவர்கள், அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறியப் புறப்பட்டவர்கள் எங்களின் பணங்களில் சாப்பிட்டு ஏப்பமிட்டுக் கொண்டு, எங்கள் மக்கள் அழியும் போது இரட்டைவேட தாங்குகிறார்கள் - தாங்கள் தாங்குவதற்கு புரட்சிகர அர்த்தங்கள் வேறு தருகிறார்கள்.

இவர்கள் இரட்டைவேடத் தாங்கும் போது காணும் கனவுகளே 'செய்திகள்' 'தகவல்கள்' என்ற பெயரில் பிரச்சாரம் செய்ய ஒரு கூட்டம் இருப்பதை எண்ணிக் கவலைப்படுகின்றோம்.

(ம. பாபா)

→

படிப்பகம்

www.padippakam.com


உண்மைகள் உறங்குவதில்லை. அவர்களின் பொய்கள் வெளிநாடுகளில் சப்பாத்துப் போட்டுக் கொண்டு, குடையும் பிடித்துக் கொண்டு உல்லாசமாக உலாவரும். ஆனால் எங்கள் தாயகத்தில் அவர்களின் புரட்டல்களும், கற்பனை வாதங்களும் எடுபடா. ஏனெனில் இன்று தாயகத்தில் வாழும் மக்கள் எங்கள் எல்லோரையும் விடப் புத்திசாலிகள் - எங்கள் எல்லோரையும் விட தமிழீழத்தில் வாழும் மக்கள் சிந்திக்க தெரிந்தவர்கள் ஏனென்றால் அவர்கள் யுத்தத்தின் நடுவே வாழ்கிறார்கள்.

அவர்களின் மத்தியல் இந்த கற்பனை வாதிகளின் பொய்களும், கற்பனைகளும் செல்லாக் காசுகள்தான். அவர்கள் இவர்களை தூக்கி எறிந்து விட்டார்கள். வெளிநாடுகளில் உள்ளவர்களும் உணர்ந்து வருகிறார்கள்.

உண்மைகள் உறங்குவதில்லை!

பொய்கள் நிலைப்பதில்லை.

முத்து

- டென்மார்க் -

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

படிப்பகம்

www.padippakam.com


இந்த இதழில் வெளிவரும்
அனைத்து ஆக்கங்களுக்கும்
அதனை எழுதியவர்தான் பொறுப்பு.

இந்த இதழில் வெளிவரும்
ஆக்கங்கள் பற்றிய அனைத்து
சிந்தனைகளும், விமர்சனங்களும்
எங்களை நேரடியாக சந்திக்கும் போதோ
அல்லது எமது முகவரிக்கு கடிதம்
மூலமோ செய்யலாம்.

- ஆசிரியர் குழு -

இந்த இதழ் சம்பந்தமான சகல
தொடர்புகளுக்கும்
எமது முகவரி :-

"THAYAKAM"
SØNDERGADE - 62
7441 BORDING
DENMARK

படிப்பகம்

www.padippakam.com

அடுத்த இதழில்,

டெலோ[redacted]வின் சமூக விரோதச் செயல்களை கட்டுப்படுத்திய சம்பவம் பற்றிய ஆய்வு !

---

## உதவுங்கள்

எமது மண்ணில் உங்கள் சொந்தங்களின் தங்கள் தியாகங்களால் பாதுகாத்துக் கொண்டு, தினம் தினம் எமது எதிரிகளை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும்,
தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துங்கள்.
உங்களால் இயன்றது.....
ஆம், உங்களால் இயலும்.
நாளை நீங்களும்
தமிழீழ மண்ணின் மக்கள் தான்!

- தமிழர் நலன்புரி மன்றம் -
டென்மார்க்

படிப்பகம்

www.padippakam.com

# குழம்ப வேண்டாம்
# குழப்ப வேண்டாம்

அண்மையில் தமிழர் நலன்புரி மன்றத்தைச் சேர்ந்த பிரச்சாரப் பிரிவுத் தோழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பிரச்சாரத்திற்காக தமிழர்கள் வாழும் சில இடங்களுக்குச் சென்றார்கள். அங்கே தங்களை இயக்கங்களினதும், கழகங்களினதும் பின்னால் அலைந்தவர்கள் என்று முத்திரை குத்திய சில தமிழர்கள் சில வினாக்களை பிரச்சாரப்பிரிவுத் தோழர்களிடம் முன்வைத்தார்கள். எமது தோழர்கள் அதற்குத் தகுந்த விடைகளை அவர்களுக்கு அளித்தார்கள். எனினும் அந்த கேள்விகளின் விளக்கங்களை உங்கள் முன் வைக்கின்றோம்.

கேள்வி இல.

1. யாழ்ப்பாண பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் செலவழித்த ரொக்கட்டுகளினதும், தோட்டாக்களினதும் பார்க்க குறைந்த அளவு ஆயுதங்களையே பொலிஸ் நிலையத்தில் புலிகள் கைப்பற்றினார்கள். எனவே இது புலிகளுக்கு ஒரு தோல்வியா? இதற்கான விளக்கம் என்ன?

இந்தக் கேள்வியை உண்மையிலேயே கேட்டிருந்த கேட்டவர்களின்

படிப்பகம்

www.padippakam.com


அரசியல் வறுமையை நினைத்துக் கவலைப் படுகின்றோம். அவர்களுக்கு அவர்கள் முன்பு இருந்ததாகச் சொல்லப்படும் அமைப்புக்களின் விடுதலைப் போராட்டம் ஒரு இலாப நட்ட வர்த்தகம் போலத்தா வளர்க்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி என்பது மக்களின் நம்பிக்கையைப் பெ துள்ளது. எமது மக்கள் போராட்டத்தி போராட்டத்தின் பலத்தில் நம்பிக்கை வைப்பதன் மூலம்தான் மக்களின் பங்களிப்பும் போராட்டத்தின் உச்சமாக ஒரு தாக்கமானது.

அ) அரச நிர்வாகத்தைச் சீர் குலைப்பதற்காக

ஆ) மக்களிடம் நம்பிக்கையை வளர்ப்பதற்காக

இ) அரச கூலிப்படைகளின் பலம், நம்பிக் கட்டுப்பாடு இவற்றைச் சீர்குலைத்து அவர்களைச் சின் கொள்ளச் செய்ய,

ஈ) வெளிநாடுகளின் எமது போராட்டம் பற்றியும் மக்களின் பங்களிப்பைப் பற்றியும் அறியச் செய்வதற்காக,

உ) ஆயுதங்களைப் பறித் தெடுப்பதற்காக,

ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com


யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலானது இந்த அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றி வெற்றியடையச் செய்துள்ளது. தாக்குதல் முடிவடைந்தவுடன் பொதுமக்கள் மகிழ்ச்சிகரமாகப் புலிகளுக்குக் கொடுத்த மா பெரும் வரவேற்பும், தாக்குதல் முடிந்தும் இரண்டு நாட்களாக யாழ் நகரை புலிகள் பாதுகாத்ததும் மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் இந்தத் தாக்குதல் நம்பிக்கையூட்டியுள்ளதைக் காட்டுகின்றது. மேலும் யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலின், பின்பு பொலிஸ் நிர்வாகம் முற்றாக அழித்தொழிக்கப்பட்டது.

ஒரு தாக்குதலின் வெற்றி என்பது ஆயுதங்களின் எண்ணிக்கையல்ல, மேலே சொன்ன நோக்கங்களின் வெற்றியில் தான் உள்ளது.

இன்று விடுதலை வீரர்கள் என்று கூறிக் கொள்ளும் இயக்க உறுப்பினர்களைக் கொண்ட கும்பல்களிடம் கூட குறைந்தது 5. S.M.G (உப இயந்திரத் துப்பாக்கி) இருக்கும்.

ஆனால் 1982ம் ஆண்டு அக்டோபர் 27ம் திகதி தமிழீழத்தின் மிகச் சிறந்த கொரில்லாத் தளபதி சீலன் தலைமையில்

படிப்பகம்

www.padippakam.com


அப்போது அமைப்பிலிருந்த 3/4 பகுதி உறுப்பினர்களும் உயிரைப் பணயம் வைத்து சாவகச்சேரிப் பொலிஸ் நிலையம் கைப்பற்றப்பட்டது. அதில் இரண்டு S.m.g களும் புலிகளால் கைப்பற்றப் பட்டது.

இன்று எல்லாக் கும்பல்களிடமும் S.m.g க்கள் இருக்கின்றது என்பதற்காக அன்று சிலரும் புலிகளின் 75% மான உறுப்பினர்களும் உயிரைப் பணயம் வைத்து கைப்பற்றிய இரண்டு S.M.G களைக் குறைத்து மதிப்பிட முடியுமா?

83 யூலை 23ம் திகதி திருநெல்வேலியில் தளபதி செல்லக்கிளி தலைமையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 13 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தளபதி செல்லக்கிளியும் வீரமரணமடைந்தான். அதில் விடுதலைப்புலிகள் கைப்பற்றியது. 11. S.L.K களும் சில கைக்குண்டு களும். உண்மையிலேயே செல்லக்கிளியினது வீரத்தியாகத்திற்கு இந்த 11. S.L.K களும் சமனாகுமா?

ஆயுதங்களின் எண்ணிக்கையை விட அவன் தனது தியாகத்தால் விடுதலைப் போராட்டத்தை எவ்வளவு தூரம் முன்னெடுத்துச் சென்றான் என்பதே முக்கியமானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com

ஒரு தாயகத்திற்கான போராட்ட முன்
னெடுப்புக்காகச் செய்யப்படுகின்றது.
இதில் ஆயுதங்களை விட மக்கள் சக்தியி
நம்பிக்கையே முக்கியம். யாழ் பொலிஸ்
நிலையத் தாக்குதல் மக்கள் மத்தியில்
எவ்வளவு தூரம் நம்பிக்கையையும், பரப்
பரப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை
அந்த நேரம் தமிழீழத்தில் வாழ்ந்த அனை
மக்களும் நன்கு அறிவர்.

தயவு செய்து நண்பர்களே,
சற்று அவதானமாக இருங்கள்.
இனிமேல் நிறையப்பேர் வருவார்கள்.
"நான் இந்த இயக்கத்தில் இருந்தேன்.
நான் இந்த முன்னணியில் இருந்தேன்" என்
சொல்லி உங்களை குழப்புவார்கள்.
இனிமேல் இவர்களின் இந்த ஐடியாக்களை
தமிழீழத்து மண்ணில் இன்று வாழும் மக்களால்
தூக்கி எறியப்பட்டவைதான்.
இன்று மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின்
தலைமையின் கீழ் அணிதிரண்டு போராடுகின்றனர்

--------o------

www.padippakam.com

# புலிகளின் குரல்

டென்மார்க்கில் தமிழீழ செய்திகளை ஒலிபரப்பும் தொலைபேசிச் சேவையின் இலக்கம் :- 07-840225 ஆக உள்ளது.

---

## பலத்த பாதுகாவலுடன் இருந்த இரட்டை மாடிக் கட்டடத்தில் அமைந்த சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தை சிதறடித்த ஒரு வீர வரலாறு.

**27-10-82**

யாழ்ப்பாணத்தின் பெரியதும், கூடிய பாதுகாப்புக் கொண்டதும், எப்போதும், உஷார் நிலையில் வைக்கப்பட்டுமிருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின்மீது எமது கெரில்லா அணியினர் நடத்திய வெற்றிகரமான தாக்குதல் இலங்கை அரசையே கதிகலங்கச் செய்த மிகப் பெரிய தாக்குதல் நடவடிக்கையாகும். இந்தத் தாக்குதலை அடுத்து வடமாகாணத்தின் பல பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன; வடக்கின் பொலிஸ் நிர்வாகம் ஸ்தம்பித்தது. மிக நுட்பமாகத் திட்டமிடப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட இந்த அதிரடித் தாக்குதல் லெப்டினன்ட் சார்ல்ஸ் அன்ரனி (சீலன்)யின் தலைமையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

1982 அக்டோபர் 27ம் திகதி அதிகாலையில் எமது கெரில்லா தாக்குதற் பிரிவினர் ஒரு மினிபஸ்ஸைக் கடத்திவந்து பொலிஸ் நிலையத்தின் முன்றல் இறங்கி மின்னலாய் செயற்பட ஆரம்பித்தனர். கெரில்லா அணியின் ஒரு பிரிவு யாழ்—கண்டி பிரதான பாதையின் போக்குவரத்தினை முழுமையாகத் துண்டித்துவிட்ட அதே சமயம், நவீன ஆயுதங்கள் சகிதம் தாக்குதல் சீருடையில் எமது கெரில்லா அணியின் இன்னொரு பிரிவினர் பொலிஸ் நிலையத்தின் வளவுக்குள் சடுதியாக நுழைந்தனர். காவலில் நின்று கொண்டிருந்த பொலிஸ் காவலர்கள் எமது கெரில்லா வீரர்களின் நடமாட்டத்தை அவதானித்ததும் இயந்திரத் துப்பாக்கி வேட்டுகளை பொழிந்து

படிப்பகம்

பொலிஸ் கான்ஸ்டபிள் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டதுடன்
www.padippakam.com
மற்றவர்கள் காயத்துடன் தப்பி ஓடிவிட்டார்கள். பின் பிரதான கட்டடத்திற்குள் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தவாறு எமது வீரர்கள் பொலிஸ் நிலையத்தையே ஆக்கிரமித்துக் கொண்டனர். ஆயுதத் தளவாடங்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சிய அறை முதலில் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொல்லப் பட்டனர். கைக்குண்டுகளை வீசி ஆயுதக் களஞ்சிய அறையைத் தகர்த்து எமது வீரர்கள் ஆயுதத் தளவாடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். ஒரு பிரிவினர் ஆயுதக் களஞ்சிய அறையைத் தம்வசமாக்கிக் கொண்ட அதே சமயத்தில் மற்ற பிரிவினர் மேல் மாடியை ஆக்கிரமித்தனர். மேல் மாடியில் எமது வீரர்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகாயமுற்றதுடன் இன்னுமொரு பொலிஸ் அதிகாரி மாடியிலிருந்து கீழே குதித்து, தனது காலை முறித்துக் கொண்டார். கதவுக்குப் பின்னால் ஒளிந்திருந்த ஒரு பொலிஸ்காரன் துப்பாக்கியால் சுட்டதில் எமது இரண்டு போராளிகள் காயமுற்றனர்.

லெப்டினன்ட் சீலனும் இந்தக் கெரில்லாத் தாக்குதலில் காயமுற்றார். காயமடைந்தவர்கள் மினிபஸ்ஸில் பாதுகாப்புடன் வெளியில் கொணர்ந்து சேர்க்கப்பட்டனர். பொலிஸ் நிலையத்திலிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக வெளியேறினர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது நடைபெற்ற தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கந்தையா, கருணானந்தன், பொலிஸ் சாரதி திலகரட்ன ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகாயமடைந்தனர். மற்ற பொலிஸ்காரர்கள் பீதியில் பொலிஸ் நிலையத்தை விட்டு ஓடி விட்டனர். ஆயுதக்களஞ்சிய அறையிலிருந்து 19 ரிப்பீட்டர் துப்பாக்கிகள், ஒன்பது 303 ரைபிள் இரண்டு இயந்திரத்துப்பாக்கிகள். இரண்டு துவக்குகள், ஒரு சுழல் துப்பாக்கி ஆக 33 ஆயுதங்களையும் பெருந்தொகைத் தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

காலம் பலரை
மறக்கச் செய்துவிடும்.
ஆனால் மறக்க முடியாத
வர்களை, மறக்க கூடாதவர்
களை யாராலும் எளிதில்
இன் எப்போதும் மறக்க
முடியாது. இதோ,
மறக்க முடியாத ஒரு
தியாக வரலாறு இவன் →
தளபதி சாள்ஸ் அன்ரனி
(சீலன், ஆசீர்,
இதயசந்திரன்)



படிப்பகம்

www.padippakam.com

விடுதலைக்காகவே
வாழ்ந்த அந்த வீரமகனை பிரபாகரன் கண்ணீருடன் நினைவு கூர்கிறார்:-

"எவ்வளவு அற்புதமானவன் என் சீலன்!"

"ஆசையாகவல்லவா நான் அவனுக்கு இதயச்சந்திரன் என்று பெயர் வைத்தேன்.!"

"இவ்வளவு சீக்கிரமா என்னை விட்டுப் போனான்?"

"அவனது மரணச்செய்தி பொய்யாகப் போய் விடாதா என்று என் மனம் நடுங்கியதே..."

"எவ்வளவு கஷ்டங்களில் உயிருக்குயிராய்த் துணை நின்றான்..."

"காடுகளில் அவனோடு திரிந்த காலங்கள்தான் எத்தனை மகத்தானவை..."

"லட்சியங்களோடு காத்திருந்தானே..."

"ஏன் திடீரென இப்படி இல்லாமல் போனான்?

மீண்டும்... மீண்டும்...
நினைவில் சுழல்கிறது—
அந்த அழகு முகம்.
அந்த மழலைச் சிரிப்பு.
அந்தப் பாட்டு.
அன்று—
இரவு சூழ்ந்து விட்டது.
சலசலக்கும் காட்டு மரங்கள்.
சருகுகளின் ஓசை.
சில்வண்டுகளின் ரீங்காரம்.
காற்றின் வருடலில்,
கனலும் தீக்கங்குகள்.
குழுமியிருக்கும் விடுதலை இளைவல்கள்.
அவர்களிடையே பல்சுவை நிகழ்ச்சி.
இது சீலனின் முறை.
அவனுக்குப் பாட்டு.
இதோ சீலன்!
எப்போதும் போல் கட்டமிட்ட சட்டை;
கணுக்காலுக்கு மேல் மடித்துவிட்ட ஜீன்ஸ்.
அவனிடம் கூச்சம்.
சிரித்துச் சமாளிக்கிறான்.
நண்பர்களின் தூண்டுதல்.
பாட்டின் ஆரம்பம்.
ஆரவாரமான வரவேற்பு
உற்சாகமடைகிறான்.
கைகளை அகல விரித்து
கம்பீரமாகப் பாடுகிறான்.
"அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்.
இதோ இந்த அலைகள் போல...

.........





படிப்பகம்

www.padippakam.com

விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும் உறுதியையும் சிங்கள இராணுவத்தால் ஒரு போதும் அழித்து விட முடியாது. நாங்கள் மகத்தான [illegible] [illegible] [illegible] உணர்வும் உன்னதமான வெற்றியைப் பெறும் [illegible]

[illegible] (Sunday [illegible])



# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.padippakam.com

டென்மார்க் தமிழ் நண்பர்களுக்கு,

எங்கள் மண்ணிலிருந்து ஆயிரமாயிரம்
மைல்களுக்கப்பால் இருக்கும்
எங்கள் மத்தியில் ஒரு
ஒருங்கிணைவை ஏற்படுத்துவதற்காகவும்,
எங்கள் தாயகத்தின் உயிர்த்துடிப்புள்ள
விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு
உதவியாகவும்,
எம்மால் வெளியிடப்படும் 'தாயகம்'
என்ற இந்த இதழுக்கு உங்கள்
ஆக்கங்களையும், இதைப் பற்றிய
உங்கள் விமர்சனங்களையும்
ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

- நன்றி -.

அனுப்ப வேண்டிய முகவரி:-

"THAYAKAM"
SONDER GADE - 62
7441 BORDING
DANMARK

—·—.

படிப்பகம்

www.padippakam.com

# "We will Fight till we die"

— V. PIRAPAHARAN —

எமக்கு வேறேதாவது மாற்று வழியுண்டா? எமது இலட்சியத்தை அடையும்வரை நாம் போராடித்தான் ஆகவேண்டும். இந்தியாவின் அனுதாபம் எமக்கு தார்மீக பலத்தைக் கொடுக்கிறது. ஆனால் இந்தியா தனது ஆதரவை நிறுத்திக் கொள்ளுமாயின் அதனால் எமது விடுதலைப் போராட்டம் நின்றுவிடப் போவதில்லை. இந்தியாவின் ஆதரவுடனோ அல்லது வேறெந்த வெளிநாட்டு சக்திகளின் உதவியுடனோ நாம் எமது போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. நாம் சாகும்வரை போராடியே தீருவோம். நான் இறந்து போக நேருமாயின் இன்னுமொருவர் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுவார். மாவீரன் சுபாஸ் சந்திர போஸ் குறிப்பிட்டது போல, "எந்த ஒரு விடுதலைப் போராளியும் தான் தனியாக நின்று சுதந்திரத்தைப் பெற்றுக் காண்பேன் என தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது" எனது தலைமுறை சுதந்திரத்தை அடைய முடியாது அழிந்து போனால் அடுத்த பரம்பரை போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும்.

— தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்
வே. பிரபாகரன் —

(சண்டே இந்து பேட்டியிலிருந்

...ar Nallanpuri Mantram
Denmark

படிப்பகம்